# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 189/2015

ஆணை எண். 046/2016

நாள் : 30/03/2016

திரு. மில்மணி என்கிற
என்.எஸ். கிருஷ்ணன்
மொடக்குறிச்சி பேரூராட்சி, மொடக்குறிச்சி,
ஈரோடு மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
மொடக்குறிச்சி பேரூராட்சி,
மொடக்குறிச்சி,
ஈரோடு மாவட்டம். – எதிர் மனுதாரர்

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி பேரூராட்சியின் முன்னாள் 9 வது வார்டு பேரூராட்சிமன்ற உறுப்பினர் திரு மில் மணி என்கிற என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களின், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவத்திற்கு தாக்கல் செய்த முறையீட்டு மனு, 18.08.2015 அன்று பெறப்பட்டு, 189/2015 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## ஆணை

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி பேரூராட்சி 9–வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர் திரு மில் மணி என்கிற என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள், முத்தூர் மெயின் ரோடு பகுதி மக்களுக்கு பயன் பட்டு வரும் மேல்நிலைத் தொட்டி குடிநீரை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளின் அனுமதியின்றி தன்னிச்சையாக நத்தம் புறம்போக்கு பேரூராட்சி தார்ச்சாலைகளை தோண்டி PVC பைப் மூலம் புல எண்.611/1– நிலத்தில் உள்ள பேரூராட்சிக்கு பாத்தியப்பட்ட தென்னை மரங்களுக்கு நீர் பாய்ச்சி வருவதாக மனுதாரர் தெரிவித்துள்ளார். 9–வது வார்டு உறுப்பினர் திரு. K. பாலகுமார் மற்றும் அவரது தந்தையார் திரு. கைலாசம் ஆகிய இருவரும் இம்முறைகேட்டில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

2. மேற்படி முறையீட்டு மனு சம்பந்தமாக பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை பெறப்பட்டது. மனுதாரரின் புகாரை தொடர்ந்து அலுவலக பணியாளர்களை கொண்டு குடிநீரை வீணாக்காமல் இருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், பேரூராட்சிக்குப் பாத்தியப்பட்ட தென்னை மரங்களும் பராமரிக்கப்பட்டு வருவதாகவும், செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

3. இந்நிலையில் 16.10.2015 அன்று நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் வருகை தந்து எழுத்து மூலம் அறிக்கையினை விசாரணையின் போது அளித்துள்ளார். இம்முறைமன்ற நடுவம் மனுதாரரை விசாரணைக்கு அழைக்கப்பட்ட நிலையில் மின் வாரியத்தைச் சேர்ந்த அலுவலர்கள் தென்னை மரங்களுக்கு செல்லும் குடிநீர் குழாய் இணைப்பை துண்டித்து விட்டதாக தெரிவித்தார். 9–வது வார்டு, பேரூராட்சி மன்ற உறுப்பினரே மின் மோட்டாரை இயக்கி, ஏலம் எடுத்த தென்னை மரங்களுக்கு தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்த நிலையில் பேரூராட்சி அலுவலர், தற்பொழுது மின் மோட்டாரை இயக்கி வருவதாக விசாரணையில் தெரிவித்தார். இம்முறைமன்ற நடுவத்தின் கவனத்திற்கு இந்நிகழ்வினை கொண்டு சென்ற பிறகே குடிநீர் வீணாக்கப்படுவது தடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

4. மேற்காண் நிலையில், பேரூராட்சிக்கு சொந்தமான தென்னை மரங்களை தனியார் குத்தகை எடுத்த நிலையிலும், குத்தகை காலம் முடியும் வரை தென்னை மரங்களை பராமரிப்பது குத்தகைதாரரின் கடமை என்பதாலும், இந்நேர்வில் மேற்கொள்ளப்பட்ட முறை கேட்டிற்காக குத்தகைதாரர் திரு. கைலாசம் என்பவரிடமிருந்து குடிநீர் கட்டண, மின்செலவு மற்றும் பைப்லைன் போடுவதற்கு சாலைக்கு ஏற்பட்ட பழுது விவரம் மற்றும் அதற்கான தொகையை குத்தகைதாரர் திரு. கைலாசம் அவர்களிடமிருந்து வசூலித்து பேரூராட்சியின் கணக்கு தலைப்பில் வரவு வைக்க இம்முறைமன்றம் ஆணையிடப்படுகிறது.

5. வேலியே பயிரை மேய்வது போல் மன்ற உறுப்பினரே தனது தந்தை மூலம் குத்தகை எடுத்து பேரூராட்சிக்கு இழப்பும், அவப்பெயரும் ஏற்படுத்தியுள்ளார். பேரூராட்சி மன்ற உறுப்பினர் அவரது தந்தையை பேரூராட்சி மன்ற சொத்தை குத்தகைக்கு வழங்குவது நியாயமான செயல் அல்ல, அதற்கு துணைபோன நிர்வாக அலுவலர் செயல்பாடும் ஏற்புடையதல்ல. சம்பந்தப்பட்ட செயல் அலுவலர் கடமை தவறி தவறுக்கும், இழப்புக்கும் துணை போயுள்ளார். எனவே, இழப்பை ஈடுசெய்திடவும் பேரூராட்சி செயல் அலுவலர் உடன்நடவடிக்கை மேற்கொள்ளவும் செயல் அலுவலரின் கடமை தவறிய செயலுக்கு பேரூராட்சிகளின் இயக்குநர் உயரிய அலுவலர் மீது உரிய ஒழுங்கு

நடவடிக்கை எடுக்கவும், குடும்ப உறுப்பினர்களுக்கு பேரூராட்சி சொத்தை குத்தகை எடுத்த, வழங்கிய நிகழ்வுகட்கும் சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கவும் உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் முடிவு செய்து பேரூராட்சி இயக்குநருக்கு பரிந்துரை செய்கின்றது.

6. எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து அறிக்கை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்புமாறு ஆணையிடப்படுகின்றது.

2016ம் ஆண்டு மார்ச் மாதம் 30ம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இந்த ஆணை இடப்படுகின்றது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக.

பெறுநர்

செயல் அலுவலர்,
மொடக்குறிச்சி பேரூராட்சி,
மொடக்குறிச்சி,
ஈரோடு மாவட்டம்.

நகல்

பேரூராட்சிகளின் இயக்குநர்,
குறளகம், சென்னை – 600 108.

திரு. மில்மணி என்கிற
என்.எஸ். கிருஷ்ணன்
மொடக்குறிச்சி பேரூராட்சி, மொடக்குறிச்சி, ஈரோடு
மாவட்டம்.